Registered as a News Paper in Sri Lanka. பக்கங்கள் 04 விலை ரூபா 4-00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம் 01 தை (13 - 01 - 1991) ஞாயிற்றுக்கிழமை ஓசை 329

## மாணவர் மதியபோசனம்; அசமந்தத்தால் இல்லை

(கொழும்புத்துறை)

யாழ்ப்பாண மாவட்டப் பாடசாலைகளில் உள்ள சுமார் இரண்டு இலட்சம் மாணவர்களுக்கு இன்று வரை மதிய போசனமும், உணவு முத்திரை கொடுப்பனவும் வழங்கப்படவில்லை. இதுபற்றி பாடசாலைகளின் அபிவிருத்திச் சங்கத்தினர் தொடர்புகொண்டும் எதுவித பலனும் கிடைக்கவில்லை.

கல்வி அமைச்சினால் இந்த (4 ஆம் பக்கம் பார்க்க)

### சிறிலங்கா அரசாங்கம் மேற்கொள்ளும்

# இனப் படுகொலையை உலகம் கண்டிக்க முன்வரவேண்டும்

## விடுதலைப் புலிகள் சர்வதேச சமூகத்திடம் வேண்டுகோள்

(நமது நிருபர்)

பேச்சுவார்த்தைக்கு நிபந்தனை விதிப்பதன் மூலம் இந்தியா இழைத்த மாபெரும் வரலாற்றுத் தவறையே சிறிலங்காவும் செய்ய முற்படும் அதேவேளை தமிழர்மீது இனப்படுகொலைகளையும் கட்டவிழ்த்து விட்டுள்ளது. இந்த இராணுவ அடக்குமுறையினை உலக நாடுகள் கண்டிக்க முன்வருவதோடு சிறிலங்கா மீது பொருளாதார அழுத்தங்களையும் பிரயோகிக்க முன்வரவேண்டும் என விடுதலைப் புலிகள் தலைமைச் செயலகம் நேற்று விடுத்த அறிக்கை மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இவ்வறிக்கையின் முழு விபரமும் வருமாறு:

தமிழீழத்தில் சமாதானத்தையும் இயல்பு நிலையையும் உருவாக்கும் நல்லெண்ண முயற்சியாக தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் அறிவித்த காலவரையறையற்ற போர் நிறுத்தத்தையும், நிபந்தனையற்ற பேச்சுவார்த்தையையும் சிறிலங்கா அரசு நிராகரித்துள்ளது. ஆயுதங்களைக் கீழேபோட்டு சரணாகதிஅடையக்கோரும் அநீதியான நிபந்தனைகளை முன்வைத்து யுத்தத்தைத் தொடர்வதற்கு (4 ஆம் பக்கம் பார்க்க)

### கிளிநொச்சியில் விமானக் குண்டு வீச்சு

## பயணிகள் 6 பேர் பலி; 10 பேர் காயம் வாகனம் எரிந்து நாசம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில், நேற்று மாலை ஐந்து மணியளவில் சிறிலங்கா விமானப்படை விமானங்கள் குண்டு வீசித் தாக்கியதில் ஆறு பயணிகள் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டார்கள். பத்திற்கு மேற்பட்டோர் காயமடைந்தனர்.

இச் சம்பவம்பற்றித் தெரிய வருவதாவது, சிறிலங்கா விமானப்படைக்குச் சொந்தமான இரண்டு விமானங்கள் நேற்று மாலை கிளிநொச்சி பழைய இராணுவ முகாம் அருகில் வீதியில் நின்ற பயணிகள் வாகனம் மீது இரண்டு குண்டுகளை வீசின. இதன் (4ஆம் பக்கம் பார்க்க)

## இரணை இலுப்பைக்குளத்திலும் விமானக் குண்டு வீச்சு

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் உள்ள இரணை இலுப்பைக்குளம், மதிருநகர் ஆகிய பகுதிகளில் உள்ள குடியிருப்புக்கள் மீது சிறிலங்கா விமானப்படையின் குண்டுவீச்சு விமானங்கள் தாக்குதல் நடாத்தியதில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

நேற்றுக்காலை 9.45 மணியளவில் இப்பகுதிகளில் பலமுறை வட்டமிட்ட குண்டு வீச்சு விமானங்கள் குடியிருப்புக்களை நோக்கிப் பலமுறை குண்டுவீச்சுத் தாக்குதலை (4 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத்தின் சூட்டிற்கு மூன்று பொதுமக்கள் காயம்

(வவுனியா)

வவுனியா-யாழ் வீதி வழியாக போக்குவரத்தை மேற்கொண்டவர்கள் மீது இராணுவம் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் பொது மக்களில் மூவர் காயமடைந்தனர்.

நேற்றுக்காலை மேற்படிவீதி வழியாகவவுனியாநகரப்பகுதி (4ஆம் பக்கம் பார்க்க)

## நெடுங்கேணியில் குண்டு வீச்சு; பல பொதுமக்கள் காயம்

(நெடுங்கேணி)

நெடுங்கேணியில் பொது மக்கள் அதிகமாக வாழும் பகுதிகளில் சிறிலங்கா விமானப் படையின் குண்டு வீச்சு விமானங்கள் தாக்குதல் நடத்தியதில் பல பொது மக்கள் படுகாயமடைந்துள்ளனர்.

நேற்றுக் காலை 10 00 மணியளவில் சிறிலங்கா விமானப் படையின் குண்டு வீச்சு விமானங்கள் பல முறை குண்டுத் தாக்குதல்களை நடத்தின.

இத்தாக்குதலில் சிவபாதம் (வயது 32) தவம் (வயது 87) (4ஆம் பக்கம் பார்க்க)

## வீரவணக்கம்

### மதனி

சிறிலங்கா இராணுவத்தினர் நேற்றுப்பிற்பகல் பலாலியில் மேற்கொண்ட தாக்குதலில் மதனி (மட்டக்களப்பு) என்பவர் வீரமரணமடைந்துள்ளார். இவருக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர். (மு)

### தீ வைப்பு

பூந்தோட்டப் பகுதியில் இடுகினால் அமைக்கப்பட்டிருந்த கடைகள் அனைத்தும் இராணுவத்தினரால் தீ வைத்துக் கொளுத்தப் பட்டன. (தி)

## காவலரணைத் தாக்கிய ராணுவத்துடன்புலிகள் மோதல்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை முகாமைச் சேர்ந்த சிறிலங்கா இராணுவத்தினர் விடுதலைப் புலிகளின் காவலரண் மீது தாக்குதலை மேற்கொண்டனர்.

நேற்று முன்தினம் காலை 10-30 மணிக்கு ஊர்காவற்றுறைஇராணுவத்தினர் இன்ன (4ஆம் பக்கம் பார்க்க)

## ஆயுதங்களைக் கையளித்தால் புலிகளுக்குப் பாதுகாப்பு

(கொழும்பு)

– ரஞ்சன்

ஆயுதங்களைக் கையளித்து விட்டுப் புலிகள் பேச்சுவார்த்தைக்கு வருவார்களாயின் எல்லாப் புலிகள் அமைப்பு ஆள் அணியினருக்கும் அரசாங்கம் போதிய பாதுகாப்பு அளிக்கும் என்று பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னா கொழும்பில் வெளிநாட்டுத் தூதுவர் மத்தியில் உரையாற்றும்போது தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், பேச்சுக்கு வந்தால் எல்லாப் புலிகளுக்கும் அரசாங்கம் பாதுகாப்பு வழங்குவதோடு, அவர்கள் எந்தக்காரணம் கொண்டும் கைது செய்யப்பட மாட்டார்கள் என்றும் தெரிவித்தார்.

## சிறுபான்மைச் சமூகத்திடம் பலவந்தமாக திணிக்க முடியாது

(கொழும்பு)

- ரஞ்சன்

பெரும்பான்மைச் சமூகம் எதையும் பலவந்தமாகச் சிறுபான்மையினரிடம் திணிக்க முடியாது: 24 மணி நேரத்தில் சிங்களம் மட்டும் சட்டத்தின் மூலம் சிங்களத்தைப் புகுத்த முனைந்ததால் தான் தமிழர்கள் சீற்றமடைந்தனர் என்று பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா கோட்டை சோனகர் இஸ்லா (4 ஆம் பக்கம் பார்க்க)

## புகையிலை, வெங்காயம் தெற்கே செல்லத்தடை

(வவுனியா)

வடபகுதியைச் சேர்ந்த புகையிலை, வெங்காயம் போன்ற பொருட்களை தென்பகுதிக்குக் கொண்டு செல்வதற்கு இராணுவம் தடைவிதித்துள்ளது.

இராணுவத்தின் இத்தடை விதிப்பை அடுத்து பெருந்தொகையான புகையிலையும் வெங்காயமும் வவுனியா கிராமப்புறங்களில் தங்கிருக்கும் லொறிகளில் தேங்கிக்கிடப் (4ஆம் பக்கம் பார்க்க)

### உப-வேந்தர் சேமலாப நிதியிலிருந்து

## 200 தென் தமிழீழ மாணவருக்கு 500 ரூபா மாதாந்த உதவி

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் சுமார் 200 கிழக்கு மாகாண மாணவர்களின் ஜீவனோபாயம் மிகவும் கஷ்ட நிலையில் உள்ளது.

எனவே உப-வேந்தர்சேமலாப நிதியிலிருந்து தமிழீழ மாணவர்களுக்குமாதமொன்றுக்குத் தலா 500 ரூபா வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது: இந்த (4ஆம் பக்கம் பார்க்க)

## வீட்டினுள் கிடந்த பொருள் வெடித்ததில் இளைஞன் காயம்

(யாழ்ப்பாணம்)

வீட்டினுள் கிடந்த சாம்பல் நிறப் பொருளொன்று வெடித்ததில் இடது கையின் இரண்டு விரல்கள் சிதறின.

மண்டைதீவு 5ஆம் வட்டாரப் பகுதியில் இடம்பெற்ற இந்த சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது, முன்னர் சிறிலங்கா இராணுவத்தினர் தங்கியிருந்த தனது வீட்டினை பொங்கலுக்காகக் கழுவும்போது சிறிய சாம்பல் நிறமான மருந்துக் குளிசை வடிவத்திலான பொருளொன்றைச் செல்வராசா கிருஷ்ணராசா கண்டெடுத்தார். அப்பொருளை தனது இடது கையில் எடுத்து வைத்திருந் (4ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

**வகுப்புக்கள்**

J. A. S. T. (Lond)E C E. Part I யாழ் நகரில் மீண்டும் மேற்படி 1992 ஜூன் மாசுக் கிற்கான வகுப்புக்கள் 25-1-91 ஆரம்பமாகின்றன. A/L இல் 3 பாடங்களில் (Physical) சித்திபெற்ற மாணவர்கள் 21-1 91க்கு முன்பு விண்ணப் பிக்கவும். 12 மாணவர்களுக்கு மட்டும் இடவசதி உண்டு. 6 பாடங்களுக்கான மாதக் கட்டணம் ரூபா 210/- பதிவாளர், 63(40) கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம். (R-1021)

**கல்வி**

G. C E. (O/L) இல் கட்டாய பாடமாகிய கணித பாடத்தில் இதவரை சித்தியடையாதவர்களுக்கும், ஆரம்ப அறிவே இல்லாதவர்களுக்கும் தொடர் வகுப்புக்கள் மூலம் 20 நாட்களிலிருந்து 1 மாதத்திற்குள் சாதாரண திறமைச் சித்திக்கும் ஒரு மாதத்திலிருந்து ஒன்றரை மாதத்திற்குள் விசேட திறமைச் சித்திக்கும் 24 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, லோகேந்திரா வீதி, சுண்டுக்குளி (R-1024)

**தேவை**

உதவி வைத்தியர் DAM) அல்லது (MDH) மற்றும் மருத்துவ உதவியாளர் தேவை தொடர்பு: நவீன வைத்திய சாலை, 101, 33ஆம் இலக்க பலாலி வீதி, கந்தர்மடம். (R-1025)

**Second Handbook House**

பழைய புத்தகங்கள், கொப்பிகள், பேப்பர், கோழித்தீன் உறை, பித்தளை, செப்பு, போத்தல் வகைகள் வாங்கப்படும், விற்கப்படும் சேனாதிராசா, Second Hand Book House, 57, ஸ்ரான்லி வீதி, முரசொலி, இலங்கை வங்கிக்கு முன் லேன், யாழ்ப்பாணம். (B-1853)

**AL இரசாயனம்**

ஆசிரியர் சத்தீஸ் A/L 92 பொது இரசாயனம் ஆரம்பம் 15-1-91 செவ்வாய் 6-30 A M 108, பிறவுண் வீதி (R-1027)

---

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## அறிவித்தல்

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் கிளிநொச்சியில் அமைந்துள்ள விவசாய பீடத்தில் குடிசார் எந்திரவியல் (புதிய / திருத்த) வேலைகளைச் செய்ய விரும்பும் தனியார் / கூட்டுறவு / கிராம அபிவிருத்திச் சங்க ஒப்பந்தகாரர்கள் 15-01-1991— 16-01-1991 வரை திருநெல்வேலி வளாகத்தில் அல்லது 22-01-1991— 23-01-1991 வரை கிளிநொச்சியில் அமைந்துள்ள விவசாய பீட அலுவலகத்தில் வேலை நேரங்களில் பல்கலைக் கழக வேலைகள் எந்திரவியலாளருடன் தொடர்பு கொள்ளவும். தனியார் ஒப்பந்தகாரர்கள் ICTAD அல்லது ஏதாவது அரச நிறுவனத்தில் பதிவு செய்து இருப்பதோடு பின்வருவனவற்றையும் சமர்ப்பிக்க வேண்டும்.

(1) கிளிநொச்சி மாவட்டத்தில் ஏதாவது அரச நிறுவனமொன்றில் ரூபா 100,000/-க்கு குறையாத குடிசார் ஒப்பந்த வேலையை பூர்த்தி செய்த ஆவணத்தின் பிரதி.


(2) கிளிநொச்சி மாவட்டத்தில் ஒப்பந்தகாரரின் தலைமை அலுவலகம் அல்லது கிளை அலுவலகம் அமைந்திருப்பதை உறுதிப்படுத்தும் ஆவணத்தின் பிரதி.

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்,
திருநெல்வேலி.
(B/1848)

---

## மூன்றாம் ஆண்டு நினைவுகள்

| அளிப்பு | அழிப்பு |
|---|---|
| 29 – 08 – 1961 | 07 – 01 – 1988 |



## வீரசிங்கம் விஸ்வநாதன்
### (விஸ்வம்)

தொழில் நுட்ப உத்தியோகத்தர், வவுனியா.

**திதி 13 - 01 - 1991**

அன்புச் செல்வமே!

ஆண்டுகள் மூன்று உருண்டன உங்கள் சுந்தர வடிவும், கண்ணவர் கணவனாய் கண்ணியம் நிறைந்த தந்தையாய், பெற்றோரின் பெருமகனாய், உடன் பிறப்புக்களின் இனிய சகோதரனாய், உற்றாரை உபசரித்த உத்தமனாய் சீரிய சமூக சேவகனாய், தமிழ் மண் மீட்பின் பங்காளனாய் வாழ்ந்த வாழ்வுகளெல்லாம் நெஞ்சிருக்கும் வரை நினைவுகளாய்ப் பதிந்தனவே.

ஆத்ம சாந்தி விரும்பும்!

மனைவி மக்கள் பெற்றோர், சகோதரங்கள், நண்பர்கள்

வையகம், சிலாவத்தை. — பெரிகோட்டம் அல்வாய்.

(R-1017)

---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

காலவரம்பிட்டு தாக்குதல் இடை நிறுத்தம் ஒன்றை அரசு அறிவித்தது. அதிலும் ஒரு தலைப்பட்சமாக கடும் நிபந்தனைகளையும் விதித்துக் கொண்டது.

### விதண்டா வாதம்

அந்த அறிவித்தலில் தமிழீழ மக்களுக்கு எதிராக யுத்தம் செய்யவில்லை என்றும் இனப்படுகொலையில் ஈடுபடவில்லை என்றும் அரசாங்கம் மறுத்துள்ளது. இதற்கு ஆதாரமாக பல தமிழ்க் குழுக்கள் அரசுக்கு ஆதரவாக நிற்பதை சுட்டிக்காட்டியது. இந்த விதண்டாவாதத்தை எவரும் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். அரசாங்கத்தின் அடிவருடிகளாக நிற்கும் இந்த தமிழ்க்குழுக்கள் யார், இவர்களின் அரசியல் பின்னணி என்ன, இவர்கள் செய்துவரும் இனத்துரோகம் எப்படிப்பட்டது என்பதை எமது மக்களும் உலகமும் நன்கறியும். இந்தக் குழுக்கள் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் அல்லர், தமிழ்மக்களால் நிராகரிக்கப்பட்டவர்கள். முன்பு இந்திய அரசுக்கு கூலிப்படைகளாக இயங்கி, இப்பொழுது சிங்கள இராணுவத்தின் உதவிப்படைகளாக செயல்படுபவர்கள்; இராணுவத்துடன் சேர்ந்து தமிழ்மக்களின் இனப் படுகொலைக்கு துணைபோபவர்கள்; இந்த தமிழ்த் துரோகக் கும்பல்களின் ஆதரவைப் பெற்றால்போல இனப்படுகொலையை மூடி மறைக்கலாம் என அரசு எண்ணுவது உலகத்தின் கண்ணில் மண்ணைத் தூவுவதற்கு ஒப்பாகும். சிறிலங்கா அரசின் மனித உரிமை மீறல்கள் உலக சாதனையை எட்டியிருக்கிறது என்பதை சர்வதேச சமூகம் நன்கறியும். தமிழ் மக்கள் இன ரீதியாக அழிக்கப்படுவது ஒருபுறமிருக்க, 60 ஆயிரத்திற்கும் மேற்பட்ட அப்பாவிச் சிங்கள மக்களை இந்தஅரசு கொன்று குவித்திருக்கிறது என்ற குற்றச்சாட்டை சிங்கள மனித உரிமை நிறுவனங்களே முன்வைத்துள்ளன.

### அபாண்டமான பொய்

யுத்தத்தைத் தொடரப் போவதாக சிறிலங்கா அரசு நேற்று விடுத்த அறிக்கையில் விடுதலைப் புலிகள் சமாதானத்தை விரும்பும் நேர்மையான நோக்கத்துடன் போர் நிறுத்தப் பிரகடனத்தைச் செய்யவில்லை என தெரிவித்திருக்கிறது. போர் நிறுத்தத்தை நாம் தொடர்ச்சியாகமீறி வந்ததாகவும் குற்றம் சாட்டுகிறது. இது அபாண்டமான ஒரு பொய்க் குற்றச்சாட்டாகும்.

உண்மையில்சமாதானத்தை விரும்பும் நேர்மையான நோக்கம் சிறிலங்கா அரசிடம்தான் இருக்கவில்லை. சிங்கள இராணுவம் சண்டையைத் தொடர விரும்புகிறது என்றும், இராணுவத்தின் விருப்புக்கு மாறாக அரசு ஒன்றும் செய்யமுடியாது என்றும் சமீபத்தில் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா பத்திரிகையாளர் மாநாடொன்றில் கூறியிருக்கிறார். இந்தக் கூற்றிலிருந்து சமாதானத்தின் விரோதிகள் யார் சண்டையை விரும்புபவர்கள் யார் என்பது தெளிவாகிறது

விடுதலைப்புலிகள் இயக்கம் போர் நிறுத்தத்தைக் கண்டிப்பான முறையில் கடைப்பிடித்து வந்திருக்கிறது. சிங்கள இராணுவத்தின் தொடர்ச்சியான ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளுக்கும் மத்தியில் நாம் மிகவும்பொறுமையுடன் போர்நிறுத்தத்தைப் பேணி வந்திருக்கிறோம். நமாகவே ஒருதலைப் பட்சமாகப்போர்நிறுத்தத்தை பிரகடனம் செய்து விட்டு, போர் நிறுத்தத்தை எதற்காக நாம் மீறவேண்டும்? எனவே சிறிலங்கா அரசின் குற்றச்சாட்டு அர்த்தமற்றது. யுத்தத்தைத்தொடர்வதற்குநியாயம் கற்பிப்பதற்காகவே சிறிலங்கா அரசு எம்மீது வீண் பழியைச் சுமத்த முயல்கிறது. இதனைச் சர்வதேச சமூகம் புரிந்துகொள்ளும் என நாம் நம்புகிறோம்.

### வரலாற்றுத் தவறு

இம் மாதம் 9 ஆம் திகதி நாம் வெளியிட்ட அறிக்கையில் பேச்சுவார்த்தைகளுக்கு எவ்வித முன்நிபந்தனைகளையும் நாம் ஏற்கப்போவதில்லை என்றும் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தை

(3 ஆம் பக்கம் பார்க்க)

---

# அந்தியேட்டியும், வீட்டுக்கிரியையும்



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 1926 – 04 – 04 | 1990 – 12 – 14 |

## கதிர்காமு சுப்பிரமணியம்

ஆலங்குளம் — துணுக்காய்

சென்ற 1990-12-14ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரவு திடீர் மரணமெய்திய எமது தந்தையாரின் மரணச் சடங்கில் (தவிர்க்க முடியாத காரணங்களினால் அறிவித்தல் கொடுக்க முடியாதிருந்த போதும்) கலந்து பல வழிகளிலும் பேருதவிகள் செய்துதவிய அனைவருக்கும் நன்றிகள் தெரிவிப்பதோடு;

இன்று 1991-01-13 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமையன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியை, வீட்டுக்கிரியைகள் ஆகியவற்றிலும் கலந்து சிறப்பித்தேகுமாறு உற்றார், உறவினர்கள் நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஆலங்குளம், துணுக்காய். — சு. பிறைசூடியும் (மகன்) சகோதரிகளும்.

(B. 1852)

---

# நினைவு கூருகின்றோம்

## தை 13

1987ஆம் ஆண்டு வீரமரணமடைந்த

பண்டிதர் (திருமலை
கோவிந்தன் (திருமலை)
வேதமணி (மன்னார்)
கிறிஸ்ரி (கிளிநொச்சி)
ஜோய் (செ. உதயகுமார் - குருநகர்)

1989ஆம் ஆண்டு வீரமரணமடைந்த

லெப். ஜெசி (சி. இரவீந்திரன் - பாவற்குளம்)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

நாங்கள்
காலம் காலமாக
வாழ்ந்து வந்த நிலத்தை
ஆதிக்க சக்திகள்
அபகரிக்க விடலாமோ?
மறுக்கப்பட்ட
எமது உரிமைகளை
பறிக்கப்பட்ட
எமது தேசத்தை
மீட்டெடுக்கும் வரை
எமது இலட்சியப் பயணம்
மரணிக்கப் போவதில்லை...

— விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி

(B-1836)

### சிந்தனைக்கு

தங்களை எவ்வளவுதான் குளிப்பாட்டிக் கொண்டாலும், காகங்கள் வெள்ளையாகப் போவதில்லை.

— தாமஸ் ஃபுல்லர்

ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம், 13-01-1991

தொலைபேசி

ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208

த. பெ. எண் 5

# 10 நாள் - ஆலோசனை. முடிவு - யுத்தப்பிரகடனம்

ஏழு நாட்கள் 'யுத்த ஓய்வின்'பின் தான் கடைப்பிடித்த யுத்த ஓய்வை கடைப்பிடிக்கப் போவதில்லை எனவும், புலிகளுக்கெதிரான தாக்குதல் நடவடிக்கைகள் தொடரும் எனவும் சிறிலங்கா அரசாங்கம் நேற்று முன்தினம் அறிவித்துள்ளது.

மலர்ந்த புத்தாண்டுடன் ஒரு தலைப்பட்சமாக தாம் போர் நிறுத்தத்தைக் கடைப்பிடிக்கப் போவதாக விடுதலைப்புலிகள் அறிவித்தமை சிறிலங்கா அரசாங்கத்திற்கு ஒரு அதிர்ச்சி தரும் செய்தியாகவே இருந்தது. மாங்குளம் தோல்வியில் இருந்து மீள முடியாமல் குழம்பிப் போயிருந்த சிறிலங்கா அரசாங்கத்திற்கு புலிகளின் இவ்வறிவிப்பானது மேலும் ஒரு நெருக்கடியைத் தோற்றுவித்தது. இந்த நெருக்கடியின் வெளிப்பாடு சிறிலங்கா அரசியல் இராணுவ வட்டாரங்களில் தெளிவாகத் தெரிந்தது. அரசாங்கம் யுத்த நிறுத்தம் தொடர்பாக பலருடனும் பல மணிநேரம் ஆலோசனை செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது.

ஆனால், இந்த ஆலோசனையின் பின்னர் அரசாங்கம் வெளியிட்ட 'யுத்த ஓய்வு' அறிவிப்பானது அரசாங்கத்தின் குழப்பமான நிலையை தெளிவாக வெளிக்காட்டியதோடு அரசாங்கம் இராணுவத்தினர் யுத்த நிறுத்த மீறல்களில் ஈடுபடுவதற்கு எந்தவித கட்டுப்பாடும் விதித்ததாகவும் அமையவுமில்லை

அதாவது இந்த 'யுத்த நிறுத்த ஓய்வு' அறிவிப்பின் போதும் அரசாங்கம் யுத்த நிறுத்தத்தைப் பற்றி தெளிவான முடிவு எதுவும் கொண்டிருக்கவில்லை. 'யுத்த ஓய்வு' நாட்களான ஏழு நாளும் அரசாங்கம் இது தொடர்பான ஆலோசனையிலேயே ஈடுபட்டிருந்தது.

இதற்குப் பின்னர், எடுக்கப்பட்ட முடிவிற்கே விடுதலைப்புலிகள் யுத்த நிறுத்தத்தை ஒழுங்காகக் கடைப்பிடிக்கவில்லை என ஒரு காரணம் தெரிவிக்கப்பட்டு யுத்தப் பிரகடனம் வெளியிடப்பட்டது. இதில், கூறியுள்ள அரசாங்கத்தின் யுத்தப் பிரகடனத்திற்கான காரணமே மிகவும் பலவீனமானதாகும்.

விடுதலைப்புலிகள் யுத்த நிறுத்தத்தை மீறுவதாக அரசாங்கம் கூறி வந்த குற்றச்சாட்டுகளை விடுதலைப் புலிகள் திட்ட வட்டமாக மறுத்துள்ளனர். அதேவேளை அரசாங்கம் கூறியது போல் விடுதலைப்புலிகளின் கீழ்மட்ட உறுப்பினர்கள் புலிகளின் தலைமைப்பீட கட்டளையை ஏற்று நடப்பதில்லை என்பதும் தவறானதாகும்

உலகிலேயே இன்றுள்ள விடுதலை இயக்கங்களில் ஒழுங்கமைக்கப்பட்டதும், ஒழுக்கக்கட்டுப்பாடுகள் கொண்டதும் விடுதலைப்புலிகள் இயக்கம் என அரசியல் அவதானிகளால் தெரிவிக்கப்பட்டுள்ளது அத்தோடு இதுவரை தலைமைப்பீட கட்டளையை கீழ்மட்ட உறுப்பினர்கள் மீறியதாக எங்கும் குற்றச்சாட்டுகள் எழுந்ததும் இல்லை. இந்தநிலையில் சிறிலங்கா அரசாங்கத்தின் காரணம் தேடும் படலத்தின் ஒரு கதையே இது.

நாடு எவ்வளவோ நெருக்கடியின் மத்தியில் இருந்தும் விடுதலைப்புலிகளால் அறிவிக்கப்பட்ட இப்போர் நிறுத்தத்தை சிறிலங்கா அரசாங்கம் ஏற்றுக்கொள்ளாமைக்கு முக்கிய காரணமாக இருந்தது வடக்கினதும், கிழக்கினதும் யதார்த்த நிலையாகும்.

யுத்த நிறுத்தத்தை ஏற்றுக் கொண்டால், வடக்கு கிழக்கில் கடந்த ஆறுமாதத்தில் நிகழ்ந்தவையும். அவற்றின் பிரதிபலிப்புக்களும் வெளியுலகிற்கு வெளிச்சமாகும். எதிர்க்கட்சி அரசியல்வாதிகள், உள்நாட்டு, வெளிநாட்டுப் பத்திரிகையாளர்கள் வடக்கு - கிழக்கிற்கு வருவார்கள். வடக்கில் சில மூலைகளில் இராணுவம் முடங்கிக் கிடப்பதும், கிழக்கில் இராணுவம் புரிந்த இனப் படுகொலைகளும், அழிவுகளும் வெளியுலகிற்குத் தெரிய வரும். இந்தநிலையானது உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் சிறிலங்கா அரசாங்கத்திற்கு ஒரு ஆரோக்கியமான நிலையைத் தோற்றுவிக்காது.

இதன் காரணமாகவே யுத்தம் தொடங்கியதில் இருந்து யுத்த நிறுத்தம், பேச்சுவார்த்தை என கூறி வந்த சிறிலங்கா ஜனாதிபதியும், அவரின் அரசாங்கமும் இன்று யுத்த நிறுத்தத்தை நிராகரித்துள்ளன. அதேவேளை பேச்சுவார்த்தைக்கு நிபந்தனைகளும் விதித்துள்ளன. இதன் பிரகாரம் ஆயுதங்களைக் கைவிட்டு, தலைவர் பிரபாகரன் சிறிலங்கா அரசாங்கத்தின் மீது 'நம்பிக்கை' வைத்து பேச்சுவார்த்தைக்குப் போகவேண்டுமாம்.

சிறிலங்கா அரசாங்கத்தின் இந்த எதிர்பார்ப்பு அவர்களைப் பொறுத்து சுவையூட்டுவதாக இருக்கலாம். ஆனால் இது நடைமுறைக்கு ஒவ்வாததும் சாத்தியப்படாததும் ஒன்றாகும்.

இன்று புலிகளின் கையில் ஆயுதங்கள் இருப்பதினாலேயே சிறிலங்கா அரசாங்கம் தமிழர் உரிமையைப் பற்றிப் பேசுகின்றது. அதேவேளை தமிழர் பலமான நிலையில் நிமிர்ந்து நின்று தமது உரிமை பற்றிப் பேசுகின்றனர்.

இந்தநிலையில், தமது பலத்தை இழந்து சிறிலங்கா அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை செய்ய விடுதலைப் புலிகள் முன்னைநாள் தமிழ்த் தலைவர்களும் அல்ல. அதேவேளை தமது பாதுகாப்பை உறுதிப்படுத்தத் தெரியாத ஜோகணவிஜய வீரர்களும் அல்ல.

# பொங்கலன்று மீளளிக்கப்படவுள்ள

# கடன் பத்திரதாரர் விபரம்

( நமது நிருபர் )

பொங்கலன்று மீளளிக்கப்படவுள்ள தமிழீழ கடன் பத்திரதாரர்களின் விபரம் வருமாறு :

### கோப்பாய் உ. அ. அ. பிரிவு

| தொடர்பு இல | க. ப. இல |
|---|---|
| 1. யா. கோ. 32 | 32 |
| 2. யா. கோ. 44 | 44 |
| 3. யா. கோ. 71 | 71 |
| 4. யா. கோ. 174 | 1174 |
| 5. யா. கோ. 196 | 1196 |
| யா. கோ. 315 | 1315 |
| 6. யா. கோ. 273 | 1273 |
| 7. யா. கோ. 1203 | 8204 |
| 8. யா. கோ. 1262 | 8263 |
| 9. யா. கோ. 1530 | 8537 |
| 10. யா. கோ. 1753 | 8754 |
| 11. யா. கோ. 2256 | 9257 |
| 12. யா. கோ. 2439 | 9440 |
| 13. யா. கோ. 3158 | 14159 |
| 14. யா. கோ. 4338 | 15339 |
| 15. யா. கோ. 4923 | 15924 |
| 16. யா. கோ. 5172 | 16173 |
| 17. யா. கோ. 5531 | 16532 |
| 18. யா. கோ. 5598 | 16599 |
| 19 யா. கோ. 6281 | 18282 |

### மானிப்பாய் உ. அ. அ. பிரிவு

| தொடர்பு இல | க. ப. இல |
|---|---|
| 1. யா. மா. 58 | 158 |
| 2. யா. மா. 102 | 202 |
| 3. யா. மா. 207 | 307 |
| 4. யா. மா. 257 | 357 |
| 5. யா. மா. 269 | 369 |
| 6. யா. மா. 354 | 454 |
| 7. யா. மா. 416 | 516 |
| 8. யா. மா. 554 | 654 |
| 9. யா. மா. 750 | 850 |
| 10. யா. மா. 751 | 851 |
| 11. யா. மா. 756 | 856 |
| 12. யா. மா. 970 | 1070 |
| 13. யா. மா. 1582 | 6582 |
| 14. யா. மா. 1720 | 6720 |
| 15. யா. மா. 3238 | 18738 |

### நல்லூர் உ. அ. அ. பிரிவு

| தொடர்பு இல | க. ப. இல |
|---|---|
| 1. யா. ந. 07 | 3007 |
| 2. யா. ந. 14 | 3014 |
| 3. யா. ந. 73 | 3073 |
| 4. யா. ந. 191 | 3191 |
| 5. யா. ந. 369 | 3369 |
| 6. யா. ந. 465 | 3465 |
| 7. யா. ந 511 | 3511 |
| 8. யா. ந. 515 | 3515 |
| 9. யா. ந. 552 | 3552 |
| 10. யா. ந. 655 | 3655 |
| 11. யா. ந. 823 | 3823 |
| 12. யா. ந. 845 | 3845 |
| 13. யா. ந. 873 | 3873 |
| 14. யா. ந 895 | 3895 |
| 15. யா. ந. 1047 | 10047 |
| 16. யா. ந. 1340 | 10340 |
| 17. யா. ந. 2115 | 11115 |
| 18. யா. ந. 3015 | 12015 |
| 19. யா. ந. 4211 | 13211 |
| 20. யா. ந. 4548 | 13548 |
| 21. யா. ந. 4620 | 13620 |
| 22. யா. ந. 5156 | 19656 |

### சங்கானை உ. அ. அ. பிரிவு

| தொடர்பு இல | க. ப. இல |
|---|---|
| 1. யா. ச. 12 | 27012 |
| 2. யா. ச. 26 | 27026 |
| 3. யா. ச. 74 | 27074 |
| 4. யா. ச. 97 | 27097 |
| 5. யா. ச. 108 | 27108 |
| 6. யா. ச. 476 | 27476 |
| 7. யா. ச. 731 | 27731 |
| 8. யா. ச. 791 | 27791 |
| 9. யா. ச. 1395 | 28395 |
| 10. யா. ச. 2385 | 29385 |
| 11. யா. ச. 2541 | 29541 |

### உடுவில் உ. அ. அ. பிரிவு

| தொடர்பு இல | க. ப. இல |
|---|---|
| 1. யா. உ. 362 | 2363 |
| 2. யா. உ. 639 | 2640 |
| 3. யா. உ. 650 | 2651 |
| 4. யா. உ. 1323 | 4324 |
| 5. யா. உ. 1573 | 4574 |
| 6 யா. உ. 2089 | 5090 |
| 7. யா. உ. 2974 | 5975 |
| 8. யா. உ. 3023 | 26024 |
| 9. யா. உ. 3125 | 26126 |
| 10. யா. உ. 3171 | 26172 |

### பருத்தித்துறை உ. அ. அ. பிரிவு

| தொடர்பு இல | க. ப. இல |
|---|---|
| 1. யா பரு. 20 | 20012 |
| 2. யா. பரு. 29 | 20021 |
| 3. யா. பரு. 31 | 20023 |
| 4. யா. பரு. 51 | 20043 |
| 5. யா. பரு. 135 | 20135 |
| 6. யா. பரு. 610 | 20610 |
| 7. யா. பரு. 628 | 20628 |
| 8. யா. பரு. 825 | 20825 |
| 9. யா. பரு. 827 | 20827 |
| 10. யா. பரு. 844 | 20844 |
| 11. யா. பரு. 905 | 20905 |
| 12. யா. பரு. 1170 | 21170 |
| 13. யா. பரு. 1386 | 21386 |
| 14. யா. பரு. 3368 | 30368 |
| 15. யா. பரு. 3529 | 30529 |
| 16. யா. பரு. 3585 | 30585 |

### வெளியகழ்வு

| தொடர்பு இல | க. ப. இல |
|---|---|
| 1. யா. வெ. 20 | 17020 |
| 2. யா. வெ. 185 | 17185 |
| 3. யா. வெ. 504 | 17504 |
| 4. யா. வெ. 645 | 17645 |
| 5. யா. வெ. 662 | 17662 |
| 6. யா. வெ. 727 | 17727 |
| 7. யா. வெ. 771 | 17771 |

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

களையே நாம் விரும்புவதாகவும் திட்டவட்டமாக தெரிவித்திருந்தோம். ஆனால் சிறிலங்கா பேச்சுவார்த்தைகளுக்கு கடுமையான, ஏற்றுக்கொள்ள முடியாத பல முன் நிபந்தனைகளை விதித்திருக்கிறது. ஆயுதங்களைக் கைவிட வேண்டும் என்பது இதில் முக்கிய நிபந்தனையாக இருக்கிறது. எமது இயக்கம் கடந்த 17 ஆண்டுகளாக ஆயுதப் போராட்டத்தை ஏன் நடத்திவருகிறது என்பதைச் சிறிதேனும் விளங்கிக்கொள்ளாமல் இந்த நிபந்தனை முன்வைக்கப்பட்டிருப்பது எமக்கு ஒருபுறம் ஆச்சரியத்தையும் மறுபுறம் கவலையையும் தருகிறது. இந்திய அரசும் இதுபோன்ற நிபந்தனையை விதித்ததால் விடுதலைப் புலிகளுக்கும் இந்திய இராணுவத்திற்கும் ஒரு நீண்டயுத்தம் மூண்டது என்பதும், இறுதியில் எம்மிடம் ஆயுதங்களைகளையமுடியாத நிலையில் இந்திய இராணுவம் வெளியேறியது என்பதும் சிறிலங்கா அரசிற்கு நன்கு தெரிந்த விடயம். இந்திய அரசு செய்த மாபெரும் வரலாற்றுத் தவறையே சிறிலங்கா அரசும் செய்யப்போகிறது என்பதை நாம் இங்கு சுட்டிக்காட்டவிரும்புகிறோம்

**விடுதலை இயக்கத்தின் தலைவர்**

சிறிலங்கா அரசு விடுத்துள்ள அறிக்கையில் இராணுவப்பிரிவு, அரசியற்பிரிவு என்ற ரீதியில் எமது இயக்கத்தைப் பிளவு படுத்திக்காட்ட முனைகிறது. எமது இயக்கத்தின் தலைவர் பிரபாகரனை இராணுவப் பிரிவுத் தலைவராக தவறாக மதிப்பிடுகிறது. தமிழீழவிடுதலைப்புலிகள் இயக்கமானது இராணுவ அரசியல் அமைப்புகள் ஒன்றிணைந்த ஒரு தேசிய விடுதலை இயக்கம் என்பதையும், அந்த விடுதலை இயக்கத்தின் தலைவராகவே பிரபாகரன் பதவிவகிக்கிறார் என்பதையும் சிறிலங்கா அரசு புரிந்து கொள்ளவில்லைப் போலும். அத்தோடு, எமது இயக்கத்தில் இராணுவம், அரசியல் என்ற வேறுபாடு இல்லை. பேச்சுவார்த்தைகளில் யார் பங்குபற்றவேண்டும் என்பதைச் சிறிலங்கா அரசு தீர்மானிக்க முடியாது. அது எமது இயக்கத் தலைமைப்பீடம் எடுக்க வேண்டிய முடிவு.

**திட்டமிட்ட குற்றச்சாட்டுகள்**

சிறிலங்கா அரசு வேறுபல அபாண்டமான பொய்க் குற்றச்சாட்டுகளை எம்மீது சுமத்தியிருக்கின்றது. எமது இயக்கம் மீது களங்கத்தை ஏற்படுத்துவதோடு. சமாதானப் பேச்சுகளுக்கு முட்டுக்கட்டை போடுவதற்காக திட்டமிட்டு இந்தக் குற்றச் சாட்டுகள் முன் வைக்கப்படுகின்றன. ஒட்டுமொத்தத்தில், சிறிலங்கா அரசின் அறிக்கையை நன்கு பரிசீலனை செய்து பார்க்கும்பொழுது, தமிழ் மக்களுக்கு எதிரான யுத்தத்தைத்தொடர்ந்துநடத்தும் நோக்கில் நியாயமற்ற, ஏற்றுக்கொள்ள முடியாத முன் நிபந்தனைகள் வைக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, சமாதானமான முறையில் தமிழீழ மக்களின் நீண்டகாலப் பிரச்சினையைத் தீர்த்து வைக்க அரசு விரும்பவில்லை என்பது தெளிவாகிறது. உள்நாட்டு நிர்ப்பந்தங்களையும், தென்னிலங்கையில் தலைவிரித்தாடும் சமூகப் பொருளாதாரப் பிரச்சினைகளையும் திசைதிருப்பும் நோக்கத்துடன் அரசாங்கம் இந்த யுத்தத்தைத் தொடர விரும்புகிறது. சிறிலங்கா அரசின் இந்த யுத்த மோகத்தினால் பாதிக்கப்படவிருப்பது தமிழ் மக்களே. இந்த யுத்தம் தொடர்வதால் ஏற்கனவே பாதிக்கப்பட்ட எமது மக்கள் மேலும் பெரிய துன்பத்தைச் சந்திக்க நேரிடும்.

**உலக நாடுகள் கண்டிக்கவேண்டும்**

எனவே, இலங்கைத் தீவில் சமாதானத்தையும், பேச்சு மூலம் தீர்வையும் விரும்பும் உலக நாடுகள் சிறிலங்கா அரசின் இராணுவ அடக்குமுறைக் கொள்கையைக் கண்டிக்க முன்வரவேண்டும். சிறிலங்கா அரசுக்கு உதவிகளை நிறுத்தி சமாதானப் பாதையைக் கடைப்பிடிக்க வற்புறுத்தவேண்டும்.

சிறிலங்காவில் மனித உரிமை மீறல்கள் சகிக்க முடியாத அளவிற்கு மீறப்பட்டு வருவதை நன்கு தெரிந்தும் மேற்கத்தைய நாடுகள் தொடர்ந்தும் கடனுதவி வழங்கிவருகின்றன. சீனா போன்ற நாடுகள் ஆயுதங்களைக் குவித்துவருகின்றன. இந்த உதவிகள் கிடைப்பதால் துணிவுகொண்ட சிறிலங்கா அரசு தொடர்ந்து மனித உரிமைகளை மீறி, மனித நீதிக்கு விரோதமாகச் செயற்படுகிறது. எனவே, சிறிலங்கா மீது பொருளாதார அழுத்தங்களைப் போடவேண்டியது நாகரீக உலகத்தின் கடமையாகும்.

**சிறிலங்காவே பொறுப்பு**

தமிழீழத்தில் ஒரு நிரந்தர சமாதானம் ஏற்பட்டு, எமது மக்கள் சுதந்திரமாக, கௌரவமாக, பாதுகாப்பாக வாழ வேண்டும் என்பதற்காகவே நாம் போராடி வருகின்றோம். ஆனால் எமது நேர்மையான நோக்கத்தையும், தூய்மையான அரசியல் இலட்சியத்தையும் தவறாக மதிப்பிட்டு எம்மை அழித்து விடும் நோக்கத்துடன் சிங்கள அரசு யுத்தத்தைத் தொடர முடிவெடுத்துள்ளது. எனவே, இந்த யுத்தத்தால் ஏற்படக் கூடிய சகல விதமான விளைவுகளுக்கும் சிறிலங்கா அரசுதான் பொறுப்பேற்க வேண்டும்.

# உலகில் அமெரிக்க நிலைகளை இஸ்லாமியர் தாக்கவேண்டும்

(பாக்தாத்)

முஸ்லிம் அறிஞர் மாநாடு ஒன்றில் நேற்றுப் பேசிய ஈராக்கிய ஜனாதிபதி சதாம் ஹூசைன் பாலஸ்தீன விவகாரத்திற்கு ஒருதீர்வு கிடைக்கும் வரையில் குவைத்தை விட்டு வெளியேறப்போவதில்லை என்பதைத் தெளிவு படுத்தியுள்ளார். வளைகுடாவில் போர் ஏற்படுமேயானால் அப் புனிதப்போரை எதிர்கொள்ள ஈராக்கிய வீரர்கள் தயாராக இருப்பதாகக் கூறியதுடன், உலகெங்கிலுமுள்ள அமெரிக்க மற்றும் மேற்கு நாடுகளின் நிலையங்களைத் தாக்க முஸ்லிம்கள் முன்வர வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

இதனிடையில் எதிர்வரும் பதினைந்தாம் திகதி நள்ளிரவு பன்னிரண்டு மணிக்கு (நியூயோர்க் நேரம்) முன்பதாக குவைத்தை விட்டு ஈராக் வெளியேறாவிடில் தாக்குதல் ஆரம்பிக்கப்படுமென அமெரிக்க அரசின் சார்பில் ஜேம்ஸ் பேக்கர் கூறியுள்ளார் இவை இவ்விதமிருக்க ஐ. நா. செயலர் பெரஸ் டி கொயிலர் சமாதான முயற்சியை மேற்கொண்டு பாக்தாத் விரைகின்றார். பிரான்சிய அரசுத் தலைவர்களுடனும் ஏனைய ஐரோப்பிய சமூகத்தலைவர்களுடனும் பேச்சுவார்த்தை நடாத்திவிட்டு ஜோர்தான் சென்ற பெரஸ் டி கொயிலர் அம்மானில் ஜோர்தான் மன்னரைச் சந்தித்துப் பேசியுள்ளார்.

ஈராக்கிய அதிபர் சதாம் ஹூசைன் விரும்புவது போன்று பாலஸ்தீனப் பிரச்சினைக்கான சர்வதேச சமாதான மாநாடு கூட்டுவது தொடர்பாகவும், குவைத்திலிருந்து ஈராக் வெளியேறும் அதேசமயம் சவூதிஅரேபியாவிலிருந்து அமெரிக்க மற்றும் மேற்கு நாட்டுப்படைகளும் விலக்கப்படலாம் என்றும் ஐ. நா. படை ஒன்று அமைதியைக் கண்காணிப்பது போன்ற பலவிதமான ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டிருக்கின்றன. எனினும் தாம் புதிய யோசனைகள் எதையும் எடுத்துச் செல்லவில்லை என கொயிலர் கூறியுள்ளார்.

—சதாம் ஹூசைன்

## யுத்தத்தைத் தடுப்பதற்கு சோவியத்தும் முயற்சி

(லண்டன்)

வளைகுடாவில் யுத்தம் மூளாமல் தவிர்க்கும் முக்கியமான கடைசி நேர ராஜதந்திரப் பணியில் சோவியத் யூனியன் ஈடுபட்டுள்ளது.

இதேவேளை பாக்தாத் சென்றுள்ள ஐ. நா பொதுச் செயலாளர் ஈராக்கையும், அமெரிக்காவையும் மீளவும் பேச்சுவார்த்தைக்கு கொண்டுவர முயற்சிப்பார் என ஜோர்தான் வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

பாலஸ்தீன விடுதலை இயக்கத்தலைவர் யாசீர் அரபாத்தும் ஈராக் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த பாக்தாத் சென்றடைந்துள்ளார்.

---

## சையிக்கிள் தவறிவிட்டது

குருநகர் வாடியில் நேற்றுக் காலை எட்டு மணியளவில் ஏசியா சையிக்கிள் ஒன்று காணாமற் போய்விட்டது. ஜெயராம் என்பவரிடம் இரவலாகப் பெற்ற இச் சைக்கிளை வாடியில் வைத்துவிட்டுச் சென்ற சில கணங்களில் காணாமற் போயுள்ளது. தயவுசெய்து இச் சயிக்கிளை தவறுதலாக எடுத்துச் சென்றவர்கள் ''ஈழநாதம்'' அலுவலகத்தில் ஒப்படைக்கும்படி வேண்டப்படுகின்றனர் தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

---

மாணவர் மதிய

முத்திரைகள்வழங்க அங்கீகரிக்கப்பட்டுப் பல மாதங்களாகியும் இங்குள்ள சில அதிகாரிகளின் அசமந்தப்போக்கினால் இவை வழங்கப்படாத நிலையில் இருக்கின்றனவாம்.

கடந்தவருடம் ஜூன்மாதத்திற்குப் பின்னர் பாடசாலைகள் மீண்டும் ஆரம்பித்த போதும் அந்தத் திட்டம்பற்றி எவரும் அக்கறை காட்டவில்லையென்று பெற்றோர் கவலை தெரிவித்தனர்.

இது விடயம் குறித்து யாழ். கல்வி அலுவலக அதிகாரிகளிடம் விசாரித்தபோது, இந்த முத்திரை வழங்கும் திட்டம் முற்றுமுழுதாகச் சகல உதவி அரசாங்க அதிபர்களிடமும்ஒப்படைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளனர். (24

---

நெடுங்கேணியில

கனகேந்திரம் (வயது 19) மயூரன் (வயது 18) ஆகிய பொது மக்கள் படுகாயமடைந்ததுடன் அப்பகுதியில் இருந்த வர்த்தக நிலையம் ஒன்றும்முற்றாகச்சேதமடைந்தது

---

இரணை

நடாத்தின.

இத்தாக்குதலில் இறம்பைக்குளத்தைச் சேர்ந்த செல்வரத்தினம் கருணைதாஸ்(வயது38) என்பவர்படுகாயமடைந்தார். இப் பகுதிகளில் இருந்த சில குடியிருப்புக்கள் பலத்தசேதமடைந்தன. (க)

---

பயணிகள்

காரணமாக பயணிகள் வாகனம் முற்றாகத் தீப்பிடித்து எரிந்தது. அதில் இருந்த பயணிகள் ஆறு பேர் கருகி மாண்டனர். பத்துப் பேர் படுகாயம் அடைந்தனர்.

அருகே இருந்த ஐந்து கடைகளும் முற்றாகச் சேதமடைந்தன.

அதேவேளை சிறிலங்கா விமானப் படையினரின் இரண்டு போர் விமானங்கள் நேற்றுக்காலை 8-30 மணிக்கு கிளிநொச்சியில் குண்டுவீச்சுத் தாக்குதலில் ஈடுபட்டன. தென்னிந்திய திருச்சபைத் தேவாலயம் பலத்தசேதத்திற்கு உள்ளாகியிருப்பதுடன் செபமாலை பிரான்சிஸ் (41) சேந்தமாருனம், பாக்கியநாதன் குமாரி(17) இளவாலை நிக்சன் (வயது 18) ஆகியோர் பலத்த காயத்திற்கு உள்ளாகியுள்ளனர். அத்துடன் வை. எம். சி. ஏ. கொலனிப்பகுதியில் நடந்த குண்டு வீச்சில் திருமதி வேலு அவ்விடத்திலேயே மரணமானார்.

அவரது மகன் கண்ணா(12) தலை, கால், பகுதிகளில் பலத்த காயத்திற்கு இலக்காகி உயிருக்குப் போராடும் நிலையில் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் இப்பகுதியில் இருந்த பொதுமக்களின் ஆறு வீடுகள் முற்றாக சேதமடைந்தன.

மீண்டும் மாலை நான்கு மணியளவில் கிளிநொச்சிப் பகுதிக்குள் பிரவேசித்த இரண்டு குண்டுவீச்சு விமானங்கள் கிளிநொச்சி பெற்றோலியக் கூட்டுத்தாபனப் பகுதியில் நடாத்திய குண்டு வீச்சுத் தாக்குதலில் வீதியால் சென்றுகொண்டிருந்த வாகனங்கள் சேதமடைந்ததுடன், க சிவபாலன் (வயது 42), திருமதி பராசக்தி (ஜெயந்திநகர்) என்பவர்கள் உட்படப் பலர் காயமடைந்தனர். (85, க)

---

இனப்படுகொலையை

சிங்கள அரசு முடிவுசெய்திருக்கிறது. சமாதான வழிமூலம் தமிழீழ மக்களின் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் சிறிலங்கா அரசுக்கு எவ்விதமான அக்கறையும் இல்லையென்பதை இந்த முடிவானது உலக சமுதாயத்திற்கு தெட்டத்தெளிவாக எடுத்துக் காட்டியிருக்கிறது. இனவாத அரசியலிலிருந்தும் இராணுவ அடக்குமுறைப் பாதையிலிருந்தும், சிங்கள ஆளும் வர்க்கம் ஒருபொழுதும் விட்டுவிலகப் போவதில்லை என்பதையும் இந்த முடிவு உலகிற்கு நன்கு உணர்த்தியிருக்கிறது.

சிறிலங்காவின் இனப்படுகொலை

போர் என்ற போர்வையில் சிறிலங்கா அரசு தமிழீழ மக்களுக்கு எதிராக ஈவிரக்கமில்லாதவாறு ஒரு கொடூரமான இனப்படுகொலையை நடத்தி வந்தது ஏழுமாதங்கள் வரை நடைபெற்ற இந்த யுத்தத்தில் ஆறாயிரத்திற்கும் மேற்பட்ட அப்பாவித்தமிழ்மக்கள் கொல்லப்பட்டனர். பல்லாயிரம் பேர் காயமடைந்தனர். பத்து லட்சம்மக்கள்இடம்பெயர்ந்து அகதிகளாயினர். தென் தமிழீழம் ரணகளமாக்கப்பட்டது. அங்குள்ள பாரம்பரிய தமிழ்க் கிராமங்களிலிருந்து தமிழர்கள் விரட்டியடிக்கப்பட்டனர். போர் ஆரம்பமாகிய காலத்தில் இருந்து தமிழீழத்தில் ஒரு திட்டமிட்ட பொருளாதாரத் தடையை அரசு திணித்தது. இதனால் உணவுவகை, மருந்துவகை, எரிபொருள் போன்ற அத்தியாவசியப் பொருள்களுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டு மக்கள் தாங்கொணாத் துன்பத்திற்கு ஆளாகினர். யுத்தம் என்ற போர்வையில் தொடர்ந்து வந்த இந்த இனப்படுகொலையைத் தடுத்துநிறுத்தி, எமது மக்களின் பரிதாப நிலையை உலகிற்கு எடுத்துக்காட்டி, அவர்களுக்கு நிம்மதியையும் நிவாரணத்தையும் பெற்றுக் கொடுக்கும் நோக்கமாக நாம் இந்தப் புத்தாண்டில் இருந்து ஒருதலைப்பட்சமான காலவரையறையற்ற போர் நிறுத்தத்தைப் பிரகடனம் செய்தோம்.

யுத்தநிறுத்தம் அதிர்ச்சியைக் கொடுத்தது

தமிழீழத்தில் சமாதானத்தையும், சகஜ நிலையையும் உண்டுபண்ணும் நல்லெண்ண நோக்கில் இந்தப் போர்நிறுத்தம் எம்மால் பிரகடனப்படுத்தப்பட்டது. இலங்கை அரசு போர்நிறுத்தத்திற்கு இணங்கினால் சமாதானப் பேச்சுக்களில் பங்குபற்றவும் நாம் இணங்கினோம். எமது முடிவை சர்வதேச உலகம் வரவேற்றது. ஆனால் எமது போர்நிறுத்த அறிவித்தல் அரசாங்கத்திற்கு அதிர்ச்சியையும், குழப்பத்தையும் உண்டுபண்ணியது. நாம் போர்நிறுத்தம் அறிவித்த திகதியில் இருந்து ஆறுநாட்கள்வரை எவ்வித முடிவு எடுக்க முடியாது அரசு தடுமாறியது. அதேசமயம், அரசாங்கம் முடிவு எடுக்குமவரை காத்திராது மூன்று நாட்களுக்கு தாக்குதல் நடவடிக்கைகளை நிறுத்துவதாக சிறிலங்கா இராணுவத் தலைமைப்பீடம் ஓர் அறிவித்தலை விடுத்தது.

இதன்பின்னர், அதாவது ஆறு நாட்கள்வரை இழுபட்ட பின்னர் போர்நிறுத்தம் என்ற வார்த்தைப் பிரயோகத்தை தவிர்த்து, ஏழுநாட்கள் வரை

---

# 8 எம்.பி.க்கள் இராஜினாமாவை ஏற்க சந்திரசேகர் மறுப்பு

(டில்லி)

இந்திய வெளியுறவு அமைச்சர் சுக்லா உட்பட எட்டு எம்.பிக்களின் இராஜினாமாக்களை பிரதமர் சந்திரசேகர் ஏற்க மறுத்துள்ளார். அதே வேளை தொடர்ந்தும் பதவியில் இருக்குமாறு கேட்டுள்ளார்.

கட்சி மாறல் சட்டத்தில் இவர்கள் அனைவரும் தமது பதவிகளை இழந்தார்கள் என்பது தெரிந்ததே.

---

வட பிராந்திய மின்சார சபைக்கு

## மாங்குளத்திலும் ஓமந்தையிலும் 5 கோடி ரூபா சேதம்

(யாழ்ப்பாணம்)

அண்மைக்கால இராணுவ நடவடிக்கைகளினால் வட பிராந்தியஇலங்கை மின்சாரச் சபைக்கு சுமார் ஐந்து கோடி ரூபா சேதம்ஏற்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. முற்றாக சேதமடைந்த ஒரு மின் கோபுரத்தையும், பகுதியாகச் சேதமடைந்த இரு மின்கோபுரங்களையும் ஓமந்தையில் ஏற்பட்ட சேதங்களையும் திருத்தியமைத்தால் மட்டுமே கிளிநொச்சிக்கு 132 கே. வி. நீர்மின்சாரம் கிடைக்க வழிபிறக்கும். இத் திருத்தங்களை மேற்கொள்வதற்கு நிர்வாக அலுவலருடன் ஐந்து அதிகாரிகளும் முப்பது தொழிலாளர்களும் ஒரு மாத காலம் ஈடுபட வேண்டியிருக்கும்.

இவ்வாறுமதிப்பிட்டிருக்கும் வடபிராந்திய இலங்கை மின்சார சபை நீர்மின்சாரத்தைப் பெற்றுக் கொடுப்பதற்கான முயற்சியில் தீவிரமாக செயற்படுவதாக தெரியவருகிறது.

---

சிறுபான்மை

மிய கலாசார நிலையத்தில் 'இனப்பிரச்சினை' என்ற தலைப்பில் உரை நிகழ்த்தும் போது தெரிவித்தார்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண அரசாங்கமும், தமிழ் தலைவர்களும் முற்பட்ட போதெல்லம் முட்டுக்கட்டைகள் ஏற்படுத்தப்பட்டன. எனவே தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்தும் அளவுக்கு வந்தார்கள் இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசும் போது,

பிரச்சினைகளின்போது எப்படியோ தப்பித்துக்கொள்ளும் அரசியல்வாதிகள் பொதுமக்களை முன்னுக்குத் தள்ளிவிடுகின்றனர். இதனால் பொதுமக்களுக்கே அழிவு. எமது இராணுவத்தினரைக் கட்டுப்படுத்த முடியாதநிலைவந்துள்ளதென்றும், நாங்கள் மிகத் தாழ்மையாகக் கட்டுப்படுத்தி வைத்துள்ளோம் என்றும் தெரிவித்தார்.

---

காவலரணைத்

மூனாய்ப் பகுதியினூடாக முன்னேறி விடுதலைப் புலிகளின் காவலரண் மீது தாக்குதல் மேற்கொண்டனர். விடுதலைப்புலிகள் எதிர்த்தாக்குதல் மேற்கொண்டதால் சிறிலங்கா இராணுவத்தினர் மேலும் முன்னேறாது பின்வாங்கிச் சென்றனர். (மு)

---

இராணுவத்தின

நோக்கி நூற்றுக்கணக்கான பிரயாணிகள் சென்ற சமயம் குறிப்பிட்ட வீதி சோதனை முகாமில் உள்ள இராணுவத்தினரால் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது.

இச் சம்பவத்தில் வீ. கே. நடராசா (70 - புத்துவெட்டுவான்) வேலுப்பிள்ளை சிவரெத்தினம் (44 -மல்லாவி) பரமுரத்தினம் (கிளிநொச்சி) ஆகியோர் காயமடைந்தனர்.

இராணுவத்தினரின் இத் தாக்குதல் சம்பவத்தை அடுத்து வவுனியா நகரப் பகுதிக்கான போக்குவரத்தை மேற்கொள்வதில் பிரயாணிகள் பெரிதும் கஷ்டமடைந்துள்ளனர்

இதேசமயம் குறிப்பிட்ட வீதிவழியாகப் பிரயாணத்தை மேற்கொள்பவர்கள் தற்கொலைக்கொப்பானவர்கள் என்று இராணுவத்தினரால் விநியோகிக்கப்பட்ட துண்டுப் பிரசுரமொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

---

மாநாடு

வளைகுடா யுத்தத்தைத் தவிர்க்கும் வகையில் ஆலோசனைகளை மேற்கொள்ள ஈராக் சர்வதேச இஸ்லாமிய மாநாடொன்றை அவசரமாக கூட்டவுள்ளது. இந்தப்புதிய ஏற்பாட்டை ஈராக் மலேசியாவுக்கு அறிவித்துள்ளது.

---

## பெற்றுக் கொள்ளவும்

மாவிட்டபுரம் வீதியில் கிடக்கக் கண்டெடுக்கப்பட்ட இரண்டு பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்கள் மூன்று பிரதிகள் ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. தவறவிட்டவர்கள் அலுவலக நேரத்தில் வந்து அடையாளம் காட்டிப் பெற்றுக்கொள்ளலாம்

---

வீட்டினுள்

தாராம். அச் சமயம் அப் பொருள் வெடித்தமையால் இடது கையில் விரல்கள் இரண்டு சிதறியதுடன் உடலெங்கும் காயங்கள் ஏற்பட்டுள்ளன. இவர் தற்போது சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

---

புகையிலை

பதை அவதானிக்க முடிகிறது

இதேவேளை, நூற்றுக்கு மதிகமான லொறிகள் உணவுப் பொருள்கள் ஏற்றப்பட்ட நிலையில் வவுனியா சர்வோதய அலுவலகப் பகுதியில் இராணுவத்தினரால் நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதாகத்தெரிவிக்கப்பட்டது.

மேற்படி லொறிகள் வட பகுதி செல்வதற்கு இராணுவம் அனுமதி மறுத்திருப்பது தெரிந்ததே. (இ)

---

200 தென்தமிழீழ

உதவி முதலில் ஒருவருட காலத்துக்கு வழங்கப்படும். நிலைமை சீரடைந்ததும் மாணவர்கள் தமது பெற்றோர்களிடமிருந்து உதவியைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கும் என யாழ் பல்கலைக்கழக உப-வேந்தர் பேராசிரியர் ஏ.துரைராஜா வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கின்றது.

அச் செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மகாபொல நிதி அல்லது உபகாரச் சம்பளமாக மாணவர்களுக்கு ரூபா 500 முதல் ரூபா 600 வரை கொடுப்பனவு வழங்கப்படுகிறது. இக் கொடுப்பனவு அவர்கள் ஜீவனோபாயத்திற்கும் போதாது இன்றைய நிலையில் ஒரு மாணவன் எவ்விதமான ஆடம்பரமுமின்றித்தன் அன்றாடத் தேவைகளைக் கவனிப்பதற்கு ரூபா 1,500 தேவைப்படுகிறது

தென் தமிழீழப் பல்கலைக்கழக மாணவர்களின் பெற்றோரும், பாதுகாவலரும் இன்றுவரை அகதி முகாம்களில் வாழலாம் என்றும் தமது உடன்பிறப்புகளுடன் தொடர்புகொள்ள முடியாத அபாக்கிய நிலையில் மாணவர்கள் கஷ்டப்படுகிறார்களென்றும் அச் செய்திக் குறிப்பு மேலும் தெரிவிக்கின்றது.

---

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1991 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 13 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.